**கவனிக்க** .- 2025.11.07 ஆந் திகதிய 2462 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2463 - 2025 නොවැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2025.11.14

2463ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II - சட்டம் சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்ற விசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 106 |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக்கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ.பாண்டிகோரால,**
அரசாங்க அழுத்தகர் ( பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,

கொழும்பு 8,

2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

105- B 82737 - 403 (2025/11)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## மஹர மாவட்ட நீதிமன்றத்தில்
## பிசுக்கால் ஏல விற்பனை

மர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் கம்பனி திருத்தப்பட்ட பெயர் மர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் என்ட் பினேன்ஸ் பீ.எல்.சீ. இலக்கம் 236, காலி வீதி, கொழும்பு 03.

*வழக்காளி*

வழக்கு இலக்கம் : DMB 46/ 15

*எதிர்*

ராஜபக்ஷ பதிரகே நிஷாந்த ராஜபக்ஷ ,
206/C,பஹல கரகமுன, கடவத்தை

*எதிராளிகள்*

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட எதிராளிக்கு,

மேற்குறித்த இலக்கமுடைய வழக்கில் 2015, மே மாதம் 20 ஆந் திகதிய தீர்வையின்படி, மேலே பெயர் குறிப்பிடப்பட்ட எதிராளியால் வழக்காளி கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டிய பதினைந்து இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து முந்நூற்று தொண்ணூற்று எட்டு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 1, 564, 398.90) ஆகிய தொகையையும், அந்தத் தொகையினை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை பிரதம கடன் தொகைக்கு வருடாந்தம் 27% வட்டியும் நிலுவையாகின்ற தவணைக் கட்டணத்திற்கு 5% தண்ட வட்டியையும் மற்றும் வேறு செலவுகளையும் செலுத்த வேண்டும் என்றும் ,

பதினைந்து இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து முந்நூற்று தொண்ணூற்று எட்டு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 1, 564, 398.90) ஆகியதொகையையும், அந்தத் தொகையினை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை பிரதம கடன் தொகைக்கு வருடாந்தம் 27% வட்டியும் நிலுவையாகின்ற தவணைக் கட்டணத்திற்கு 5% தண்ட வட்டியையும் மற்றும் வேறு செலவுகளையும் செலுத்தும்படி கட்டளையிடுமாறும், சகல கட்டணங்களையும் தீர்வைக் திகதியிலிருந்து 2 மாதங்களுக்குள் அல்லது நீதிமன்றம் குறித்த தீர்வையில் கட்டளையிடும் அதற்குக் கூடிய ஒரு காலத்திற்குள் செலுத்தப்படாவிட்டால் இங்கு கீழே ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் மற்றும் 2014.04.07 ஆந் திகதி பிரசித்த நொத்தாரிசு திருமதி ஜயங்கா டி கஹவேவிதான அவர்களால் நிறைவேற்றப்பட்ட இலக்கம் 1000 உடைய ஈட்டு முறியின் கீழ் பிணையாக வைக்கப்பட்டுள்ள குறித்த காணி மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆதனங்களை நீதிமன்றத்தினால் நியமிக்கப்படும் அதிகாரமளிக்கப்பட்ட ஏல விற்பனையாளரின் ஊடாக நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை விதிமுறைகளின் அடிப்படையில் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஏல விற்பனையாளரால் ஏலத்தில் விற்பனை செய்யுமாறும்,

குறித்த ஏல விற்பனையாளருக்கு பின்வரும் கட்டளைகளைப் பிறப்பிக்க அதிகாரம் அளிக்குமாறும்,

i. இங்கு ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் காணி முதலில் அவரால் மதிப்பீடு செய்யப்பட்ட விலைக்கு விற்பதற்கும், குறித்த மதிப்பீடு செய்யப்பட்ட விலைக்கு ஏலம் எடுப்பவர் எவரும் இல்லையென்றால் அதன் பின்னர் கூடிய விலைக்கு ஏலம் எடுப்பவருக்கு விற்பனை செய்வதற்கும் அத்தகைய கூடிய விலைக்கு ஏலம் எடுப்பவர் இல்லையென்றால் நீதிமன்றத்தினால் மதிப்பீடு செய்யப்படும் விலைக்கு விற்பதற்கும்,

ii. நீதிமன்றம் தீர்மானிக்கக்கூடிய விதிமுறைகளின் அடிப்படையில் வழக்காளிக்கு அல்லது வழக்காளியின் சார்பாக வேறு யாருக்காவது குறிப்பிட்ட இடத்தை கொள்வனவு செய்ய அனுமதிக்குமாறும்,

iii. மேற்கூறிய ஏல விற்பனையாளர் அல்லது நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட வேறு அதிகாரி அல்லது அதிகாரிகளால் கொள்வனவு செய்பவர் சார்பாக அல்லது அத்தகைய விற்பனையின் விதிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை சமர்ப்பிப்பதன் மூலம் மீள் பரிமாற்றம் அல்லது பரிமாற்றம் ஒன்றை நிறைவேற்ற அதிகாரமளிக்கவும் மற்றும் கட்டளையிடவும்,

iv.வழக்காளியே கொள்வனவு செய்பவராக இருந்தால் அதற்கான அனுமதியை வழங்கும் உத்தரவையும் மற்றும் கொள்வனவு செய்பவர் மூன்றாம் தரப்பினராக இருந்தால் நீதிமன்றத்தில் கொள்வனவுசெய்த தொகையை முறையாக வைப்பீடு செய்யுமாறு நீதிமன்றம் தெரிவித்து கட்டளையை மற்றும்,

v. மேற்குறித்த விற்பனையை உறுதிப்படுத்தி கட்டளை ஒன்றையும்,

vi. மேற்குறித்த விற்பனை செய்யப்பட்ட காணி மற்றும் வளாகத்தினை வெற்று மற்றும் இடையூறற்ற உடைமையை கொள்வனவு செய்பவருக்கு அல்லது கொள்வனவு செய்பவர்களுக்கு வழங்குவதற்கு குறித்த பிரதேசத்தின் பிசுக்கால் உத்தியோகத்தர்களுக்கு கட்டடையிடுமாறும்,

vii. வழக்குக் கட்டணம் மற்றும் இங்கு விசேடமாக கோரப்படாத கௌரவ மன்றினால் தோதெனக் கருதும் இன்னபிற நலன்களையும் பெற்றுத் தருமாறும்,

குறித்த வழக்கில் எனக்கு வழங்கப்பட்ட ஆதனத்தை தடை செய்து விற்பனை செய்யும் நிறைவேற்றல் அதிகாரத்தின்படி என்னால் தடை செய்யப்பட்ட, மேற்கூறப்பட்ட எதிராளிக்குச் சொந்தமான அசையா ஆதனம், 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி காலை 11.00 மணிக்கு கடவத்தை, கரகஹமுன, இலக்கம் 206/C என்ற இடத்தில் பிரசித்த ஏல விற்பனை மூலம் விற்கப்படும் என்று இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

i. ஆரம்பக் கொள்விலையில் 25% மான தொகையையும்;
ii. மதிப்பீட்டு கட்டணமான 0.5% மான தொகையையும்;
iii. ஏல விற்பனைக் கட்டணங்கள் மற்றும் அரசாங்கக் கட்டணங்களையும்;
iv. குடியியில் நடவடிக்கை முறை சட்டக்கோவையின் 25B பிரிவின்படி பிசுக்கால் கட்டணம்;
v. விற்பனைக்கான சகல கட்டணங்களும்.

விற்பனை நிறைவுற்ற உடனேயே கொள்வனவு செய்தவர் குறித்த தொகையினை பணமாக என்னிடம் ( ஏல விற்பனையாளர்) செலுத்தவேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கொள்வனவு விலையின் 25% மட்டும் செலுத்தப்பட்டிருந்தால் எஞ்சிய 75% கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் மேற்குறித்த இலக்கமுடைய வழக்கிற்கு 30 நாட்களிற்குள் வைப்புச் செய்தல் வேண்டும்.

**மேற்குறித்த ஆதன அட்டவணை**

மேல் மாகாணத்தின், கம்பஹா மாவட்டத்தில் உள்ள சியனே கோரல, அதிகாரி பற்று, மஹர பிரதேச செயலாளர் பிரிவில், மஹர பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள், இலக்கம் 429 , பஹல கரகஹமுன கிராம அலுவலர் பிரிவில், பஹல கரகஹமுனவில் அமைந்துள்ள, மில்லகஹவத்த என்ற காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. பீ.எல். பிரனாந்து அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1999. 02.18 ஆந் திகதிய இலக்கம் 3431 ஐ உடைய நிலவரைபடத்தில் காட்டப்பட்டுள்ள துண்டம் 1C என்ற காணிக்கு எல்லைகள் - வடக்கு: கல்ரோத வீதி; கிழக்கு: கல்ரோத வீதி மற்றும் சிசிர சமந்தவுக்குச் சொந்தமான காணி; தெற்கு: சிசிர சமந்தவிற்குச் சொத்தமான காணி மற்றும் துண்டு இலக்கம் 1E; மேற்கு: துண்டு இலக்கம் 1B மற்றும் 1Eயின் பகுதிகள் என்ற எல்லைகளுக்குள் ஆறு தசம் பூச்சியம் இரண்டு பேர்ச் (0ஏ.0றூ.6.02பே.) அளவு கொண்ட காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, கொடி, பழங்கள் போன்ற அனைத்துமாகும். இது மஹர காணிப்பதிவு அலுவலகத்தில் C 544/ 167 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பதிவாளர்/ பிரதி பிசுக்கால் உத்தியோகத்தர்,
மாவட்ட நீதிமன்றம்,
மஹர.

2025 , ஒற்றோபர் 15.

11- 136

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தின் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | |
|---|---|---|---|---|---|---|
| | | | **அட்டவணை 2025** | | | |
| நவெம்பர் | .. | வெள்ளி | 07.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 24.10.2025 |
| | | வெள்ளி | 14.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 31.10.2025 |
| | | வெள்ளி | 21.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 07.11.2025 |
| | | வெள்ளி | 28.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 14.11.2025 |
| திசெம்பர் | .. | வெள்ளி | 05.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 21.11.2025 |
| | | வெள்ளி | 12.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 28.11.2025 |
| | | வெள்ளி | 19.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 05.12.2025 |
| | | வெள்ளி | 26.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி 12.12.2025 |
| | | | **அட்டவணை 2026** | | | |
| சனவரி | .. | வெள்ளி | 02.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி 19.12.2025 |
| | | வெள்ளி | 09.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி 26.12.2025 |
| | | வெள்ளி | 16.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி 02.01.2026 |
| | | வெள்ளி | 24.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி 09.01.2026 |
| | | வெள்ளி | 30.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி 16.01.2026 |

**எஸ்.டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது